எண்ணம் ஏற்படும்படிச் சொல்லக்கூடாது. எந்தத் திட்டமும் தவறே இல்லாமல் நடைபெறுவதில்லை. இத்தகைய தவறு நம் நாட்டில் மட்டுமல்ல, மற்ற நாடுகளிலும் நடைபெறுகிறது.

திருச்சிராப்பள்ளிக்கு நூற்பாலை

*138 வினா—திரு. சி. க. வடிவேலு : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை, மேட்டுப்பாளையம், மணல்மேடு போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பான்மை மக்களான நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அப்பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திருக்களம்பூர் கிராமத்தில் கிடைக்கப்பெற்ற சிலைகள்

*139 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருக்களம்பூர் கிராமத்தில் அண்மையில் பழங்காலத்து சிலைகள் எவையேனும் கண்டு எடுக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) திருக்களம்பூர் கிராமத்தில் 8–5–73 அன்று வில்வான்யேஸ்வரர் திருக்கோவிலுக்குச் சொந்தமான சர்வே எண். 75/1-ல் உள்ள நிலத்தில் வாய்க்கால் வெட்டும்போது சுவாமி சிலைகள், இதர பூஜை சாமான்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக உள்ளன. புதையல் சட்டம் பிரிவு 7-ன்படி விசாரணை முடிவுற்றபின் இறுதி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பழங்காலத்து சிலைகள் தமிழகத்தில் அடிக்கடி ஏராளமாகக் கிடைக்கின்றன. இவைகளை எல்லாம் ஒரே இடத்தில் சேர்த்து வைத்து, ஒரு ஆராய்ச்சி செய்து புத்தகமாகத் தயாரித்து வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற 'இந்தியன் ட்ரஷர் ட்ரோவ்' ஆக்ட்படி சிலைகள் பற்றிய விபரங்கள் தயாரிக்கப்பட்டு புத்தமாக வெளியிட வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. இந்தக் கேள்வி மூலக் கேள்வியோடு சம்பந்தப்பட்டதல்ல.